செ.வெ.எண்:52 நாள்:28.01.2018

# திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி.இ.ஆ.ப., அவர்கள் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கி முகாமினை தொடங்கி வைத்தார்.

----

திருநெல்வேலி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை குழந்தைகள் பிரிவில் போலியோ சொட்டு மருந்து வழங்கும் முகாம் இன்று (28.01.2018) நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கி முகமை தொடங்கி வைத்தார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

திருநெல்வேலி மாவட்டத்தில் தீவிர பல்ஸ் போலியோ சொட்டு மருந்து முகாம் இன்று நடைபெறுகிறது. இம்முகாமில் மூலம் 2,64,360 குழந்தைகள் பயன்பெறவுள்ளனார். இரண்டாவது தவணையாக வருகின்ற 11.03.2018 ஞாயிற்றுகிழமை அன்று சொட்டு மருந்து முகாம் நடைபெற உள்ளது. கிராமபுற பகுதிகளில் 1,608 மையங்களிலும் நகர்புறங்களிலும் 150 மையங்களிலும் அனைத்து பேருந்து நிலையங்களிலும், இரயில் நிலையங்களிலும் , இடம்பெயர்ந்து வேலை பார்க்கும் கட்டிடத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கும் மற்றும் செங்கல் சூளைகளில் வேலைபார்க்கும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கும் 70 நடமாடும் மருத்துவ குழுக்கள் மூலம் போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட உள்ளன. மேலும் புறவழிச்சாலை, சுங்கச்சாவடிகள், அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகள் ஆகியவற்றிலும் முகாம் அமைக்கப்பட்டுள்ளது. இப்பணிகளில் மருத்துவத்துறை சார்ந்தவர்கள் 1200 பணியாளர்களும், கல்வி துறைச்சார்ந்தவர் 305 நபர்களும், சத்துணவுப் பணியாளர்கள் 3,189 நபர்களும், ரோட்டரி குழுவைச் சார்ந்தவர்கள் 30 நபர்களும், தன்னார்வ தொண்டு நிறுவனத்தைச் சார்ந்த 2,255 நபர்களும் என மொத்தம் 6,979 பணியாளர்கள் திருநெல்வேலி மாவட்டத்தில் போலியோ சொட்டு மருந்து முகாமில் கலந்து பணியாற்றுகின்றனர். இம்முகாமில் காலை 7.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை சொட்டு மருந்து வழங்கப்படுகிறது. நாளை பணியாளர்கள் விடுபட்ட குழந்தைகளின் விடுகளுக்கு சென்று சொட்டு மருந்து வழங்க உள்ளனர். ஆகவே பொதுமக்கள் தாய்மார்கள் அனைவரும் ' தங்களுடைய 5 –வயதிற்குட்ப்பட்ட குழந்தைகளை அருகில் உள்ள போலியோ சொட்டு மருந்து வழங்கும் மையங்களுக்கு அழைத்துச் சென்று தவறாமல் போலியோ சொட்டு மருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். போலியோ இல்லாத உலகம் படைப்பதற்கு ஒத்துழைக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் அரசு மருத்துவமனை மருத்துவகல்லூரி முதல்வர் மரு.கண்ணன், துணை இயக்குநர் (சுகாதார பணிகள்) மரு.செந்தில்குமார், மாநகர நல அலுவலர் டாக்டர்.பொற்செல்வன், துணை மருத்துவ கண்காணிப்பாளர் மரு.ரவிச்சந்திரன், குழந்தைகள் பிரிவு துறை தலைவர் மரு.கிருஷ்ணமூர்த்தி, குழந்தைகள் பிரிவு பேராசிரியர் மரு.ஆனந்தி ஸ்ரீ, மாவட்ட சுகாதார கல்வி ஒருங்கிணைப்பாளர் திரு.அப்துல்காதர், பாளையங்கோட்டை வட்டாட்சியர் திரு.தங்கராஜ், மற்றும் அலுவலர்கள், மருத்துவர்கள், மருத்துகல்லூரி பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.